**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP.228/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08 ஆம் நாள் செவ்வாய் கிழமை நீ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | டாக்டர்.சோழன் வெங்கடேஷ் | த/பெ.: | ராஜன் |
| கிராமம்: | திருபுவனம் | தாலுக்கா: | திருவிடைமருதுார் |
| மதம்: | இந்து | தொழில்: | மருத்துவர் |
| வயது: | 36 | முகவரி: | அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருவாரூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 08.07.2025.

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். 01.04.2025–ல் அமுதா என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக மருத்துவ குழுமத்தால் அனுப்பப்பட்டார். மேற்படி அமுதா என்பவர் மோட்டார் வாகன விபத்தில் காயம் அடைந்த நபர் ஆவார். நான் அமுதா என்பவரை விசாரணை செய்தபோது ஏப்ரல் மாதம் 2012–ல் விபத்தில் காயம் ஏற்பட்டதாக என்னிடம் தெரிவித்தார். நான் அந்த நபரை பரிசோதனை செய்து பார்த்தபோது நெஞ்சுப்பகுதிக்கும், வயிற்றுப்பகுதிக்கும் இடையில் உள்ள பகுதி கிழிந்திருந்ததால் வயிற்றில் உள்ள குடல் நுரையீரல் பகுதிக்கு சென்றிருந்தது. மேற்படி காயத்திற்கு 2012–ம் ஆண்டில் அந்த பெண்மணிக்கு அறுவை சிகிச்சை செய்து சரி செய்யப்பட்டது. நான் மனுதாரர் அமுதாவை பரிசோதனை செய்து பார்த்ததில் நல்ல சுயநினைவுடன் சுவாசம் நன்றாக இருந்தது. வயிறு நல்ல நிலையில் இருந்தது. வயிற்றுப்பகுதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான தழும்பு இருந்தது. மேற்படி தழும்பில் எந்த விதமான நீர் வடிதல், சளம் ஏதும் இல்லை நன்றாக இருந்தது. மார்பக

விரிவு நிலை 3 செ.மீ இருந்தது. ஒரு தடவை மூச்சு விடும் போது எண்ணி பார்த்ததில் மனுதாரர் அமுதா என்பவர் 12 வரை தான் எண்ண முடிந்தது. சாதாரணமாக 30 முதல் 40 வரை இருக்கும். வயிற்றுப்பகுதியில் உணவு உட்கொள்வதும், மலம் கழிப்பதும் எவ்வித பிரச்சனையும் இல்லை. நான் மனுதாரரை முழுமையாக பரிசோதனை செய்து அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு 15% என கருத்துரை வழங்கியுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் மருத்துவத்துறையில் எந்த துறையில் நிபுணராக பணிபுரிந்து வந்தேன் என்றால் பொது அறுவை சிகிச்சை துறையில் பணிபுரிந்து வருகிறேன். 14.04.2012–ல் மனுதாரர் மண்ணீரல் அகற்றப்பட்டுள்ளது என்றால் மனுதாரர் என்னிடம் கொடுத்த மருத்துவர் வழங்கிய குறிப்பில் மண்ணீரல் அகற்றப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை. மனுதாரருக்கு 06.06.2012–ல் குடல் பகுதி முக்கால் பகுதி அகற்றப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்று சொன்னால் கால் பகுதி தான் அகற்றப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மண்ணீரல் அகற்றப்பட்டால் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் என்றால் சரிதான். மண்ணீரல் அகற்றப்பட்டால் அந்த நபருக்கு அடிக்கடி உடல் நிலை சரியில்லாமல் இருப்பார்கள் என்றால் சரிதான். விபத்தில் மனுதாரருக்கு உதரவிதானம் கிழிந்து நுரையீரல் பகுதிக்கு சென்றுவிட்டது என்றும், அதனால் நுரையீரலில் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் அறுவை சிகிச்சை செய்த பிறகு ஒரு ஆண்டு காலமாக தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அதன் பிறகு தொற்று ஏற்பட வாய்ப்பில்லை. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு காயம் அடைந்தது 2012–ம் ஆண்டு என்றும், மனுதாரரை மருத்துவ பரிசோதனைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 19.09.2018–ம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளதால் மனுதாரரை 2012–ம் ஆண்டிலேயே மருத்துவ குழுமத்திற்கு அனுப்பி இருந்தால் கூடுதலாக காயத்தின் தன்மை இருக்கும் என்றால் சரிதான். மண்ணீரல் அகற்றப்பட்டுள்ளதும், குடல் பகுதி அகற்றப்பட்டுள்ளதும் ஆபத்து நேரிடலாம் என்பதால் அவருக்கு ஏற்பட்ட காயம் 80% –ற்கு மேல் நிரந்தர ஊனமுள்ள காயம் என்றும், மருத்துவ குழும வேலைகளை எங்களுக்கு கூடுதல் பணி சுமைகளை

ஏற்படுத்துவதாலும், போதுமான மருத்துவர்கள் பணியில் இல்லாததாலும், ஊனத்தின் தன்மையை மிக குறைவாக கணக்கிட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வழங்கிய ஊனச்சான்றிதழ் ஏற்கனவே எ.மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**மறு விசாரணை:- இல்லை,**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.